செ.இ.எண்:- 136 நாள்:- 07.04.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தி

அன்பின் திருவுருவாம் இயேசுபிரான் உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் திருநாளாகக் கொண்டாடி மகிழும் கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதர்களின் பாவம் போக்க சிலுவையில் அறையுண்ட இயேசுபிரான், அடுத்த மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த திருநாளே ஈஸ்டர் பெரு விழாவாக உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உலகம் எங்கிலும் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள் மிகுந்த மன நிறைவோடும், மன மகிழ்வோடும் ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடி மகிழும் இந்த இனிய வேளையில், உலகில் அமைதி நிலவவும், மனிதநேயம் தழைக்கவும், இயேசுபிரான் காட்டிய நல்வழிப் பாதையில் மக்கள் அனைவரும் தியாக உணர்வோடு வாழவும் பிரார்த்தித்து, ஈஸ்டர் திருநாளை கொண்டாடி மகிழும் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.